DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)
---------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.17**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | முத்துகருப்பாயி |
| Husband Name | : | மணிகண்டன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

( 1, 2 மற்றும் 7எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 9, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 8வது எதிரி ஆஜர் இல்லை. 8வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது அனுப்பானடி கவுசிங் போர்டில் வசித்து வருகிறேன். **அ.சா.16** மணிகண்டன் எனது கணவர் ஆவார். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

எனது கணவருக்கு இடையில் நோய் வாய்ப்பட்டு இரண்டு கால்களும் ஊனமாகி கதவு எண்.3/469 என்ற விலாசத்தில் சிகரெட், முறுக்கு, மிட்டாய் வைத்து டீ கடை நடத்தி வருகிறோம் என்றும், கடையை காலை 05.30 மணிக்கு திறந்து இரவு 08.00, 08.30 மணிக்கு கடையை அடைத்துவிடுவோம் என்றும், என் கணவர் காலையில் கடையில் இருந்துவிட்டு மதியம் 02.00

மணிக்கு நான் கடையை பார்த்துகொள்வேன் என்றும், கடைக்கு சபா என்ற சபாரத்தினம், சந்தானம், ஆசா என்ற ராஜா என்ற நாகமுருகன், செந்தில், சேகர், லிங்கம், கார்த்திக், ஜோதிபாண்டி ஆகியோர்கள் எப்பொழுதும் டீ சாப்பிட்டு அங்கு உட்கார்ந்திருப்பார்கள் என்றும், நாங்கள் எதுவும் அவர்களிடம் பேசமாட்டோம் என்றும், 31.01.2013ம் தேதி வழக்கம் போல 02.00 மணிக்கு என் கணவர் வீட்டிற்கு சாப்பிட வந்துவிட்டார் என்றும், நான் கடையை பார்த்து கொண்டிருந்த போது, சபா ரத்தினம், சந்தானம், ஆசா, செந்தில், சேகர், லிங்கம் ஆகியோர்கள் கடைக்கு வந்தார்கள் என்றும், லிங்கம் எனது கடைக்கு பின்னாடி போய் கத்தி, அரிவாள் ஆகியவற்றை எடுத்துகிட்டு வந்து கார்த்திக்கின் TN 64 B 2053 என்ற குட்டி யானை வண்டியில் ஏறி சிந்தாமணி இரயில்வே கேட் பக்கம் போனதாக என் கணவரிடம் சொன்னேன் என்றும், அவர் என்னிடம் எதுவும் பேசாதே என்று சொன்னார் என்றும், மறுநாள் பொட்டு சுரேஷை யாரோ கொன்றுவிட்டார்கள் என்று கேள்விபட்டேன் என்றும், சபாரத்தினம், சந்தானம்,ஆசா, செந்தில், சேகர், லிங்கம், கார்த்திக் ஆகியோர்கள் நத்தம் கோர்ட்டில் சரண்டர் ஆனதையும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.17 15:24:17 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.